செய்தி வெளியீடு எண்: 739 நாள்: 01.11.2019

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலைமையில் முதலீட்டு வழிகாட்டுதல் மற்றும் ஒற்றைச் சாளர அனுமதிகளுக்கான உயர்மட்ட குழுவின் முதல் கூட்டம் நடைபெற்றது – 1.11.2019**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் முதலீடுகளை ஊக்குவிக்க மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டம் 2018, இணையவழி ஒற்றைச்சாளர முறை, உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019, புரிந்துணர்வு ஒப்பந்த திட்டங்களுக்கான வழிகாட்டி அலுவலர்கள் நியமனம், முதலீடுகளை ஈர்க்க பிரிட்டன், அமெரிக்கா மற்றும் துபாய் நாடுகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் பயணம், தொழில் வழிகாட்டி மையத்தில் நாடுகளுக்கான சிறப்பு அமைவுகள், முதலீடுகளை ஈர்க்க ‘‘தொழில் வளர் தமிழ்நாடு’’ திட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகத்தில் முதலீட்டு வழிகாட்டுதல் பிரிவு, முதலீட்டு வழிகாட்டுதலுக்கும் மற்றும் அரசு அனுமதிகளை துரிதப்படுத்தவும், மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் ஒரு உயர் மட்டக் குழு போன்ற பல நடவடிக்கைகள் முதலீடுகளை அதிக அளவில் ஈர்த்திட மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முதலீட்டு வழிகாட்டுதல் மற்றும் ஒற்றை சாளர அனுமதிக்கான உயர்மட்டக் குழுவின் முதல் கூட்டம், இன்று (1.11.2019) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்

திரு. பி. தங்கமணி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. எம்.சி. சம்பத், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. கே.சி. கருப்பணன், மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார், மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் திரு.பா. பென்ஜமின், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில், ஒற்றைச் சாளர முறையில் வழங்கப்பட்ட தொழில் அனுமதிகள், பெரும் தொழில் முதலீட்டுத் திட்டங்கள் தொடர்புடைய நிலுவை இனங்கள், உலக முதலீட்டாளர் மாநாடு 2019 – திட்டங்களின் தற்போதைய நிலை மற்றும் சிறு குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை தொடர்புடைய இனங்கள் போன்றவை விவாதிக்கப்பட்டன. அரசு அனுமதிகளுக்காக விண்ணப்பித்து **பல்வேறு நிலைகளில் இருந்த 21 தொழில் திட்டங்கள் இந்த குழுவினரால் விவாதிக்கப்பட்டு, அனுமதிகள் வழங்கப்பட்டது. இந்த 21 தொழில் திட்டங்களின் மூலம் ரூ. 8120 கோடி அளவிற்கான தொழில் முதலீடுகள் முழுமையாக செயல்பாட்டிற்கு வந்து சுமார் 16000 நபர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளை விரைவாக உருவாக்கும் வாய்ப்பு உறுதியாகியுள்ளது. இத்திட்டங்கள், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கோவை, சேலம், விழுப்புரம், திருவண்ணாமலை, திண்டுக்கல் மற்றும் திருச்சிராப்பள்ளி என தமிழ்நாட்டின் பல பகுதிகளில் செயல்படுத்தப்படும்.**

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**